**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.348/2023**

**Prosecution Witness : 2**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : ரஞ்சித்குமார் | **Caste** | : | |
| **Father's Name** | : பாலசுப்பிரமணியம் | **Calling** | : | டிரைவர் |
| **Village** | : அம்மன்நகர் | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **33/2026** |
| | | **Dated** | : | **07.04.2026** |

**07.04.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 **திரு.ரஞ்சித்குமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் அம்மன்நகரில் குடியிருந்து டிரைவராக பணிசெய்து வருகிறேன். அ.சா.1 எனது ஊரைச்சேர்ந்தவர். கடந்த 19.10.2022 ம் தேதி திங்கள் கிழமை காலை 06.00 மணியளவில் தாடிக்கொம்பு அகரம் முத்தாழம்மன் கோவிலுக்கு சென்றபோது கோவிலில் புராதானமான கல்வெட்டு ஒன்று இருந்தது. அதில் ஏசு ஒருவர் தான் கடவுள். வேறு கடவுள் இல்லை என மதக்கலவரத்தை தூண்டும் வகையில் சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. அ.சா.1 யாரோ தெரியாமல் ஒட்டியிருப்பார்கள் என சொன்னார். அதனால் சுவரொட்டியை கிழித்து கீழே போட்டுவிட்டு சென்றுவிட்டோம்.

பின் 22.10.2022 ம் தேதி மீண்டும் அதே புராதானமான கல்வெட்டில் அதே வாசகங்களுடன் சுவரொட்டி ஒட்டப்பட்டிருப்பதாக அ.சா.1 தகவல் சொன்னார். நாங்கள் அங்கு சென்று பார்த்தோம். அருகில் இருந்தவர்கள் சுவரொட்டியை அந்தோணி சாமி மகன் அந்தோணி பாஸ்கர்ராஜ் ஒட்டியதாக தெரிவித்தார்கள். அதனால் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போஸ்டரை யார் தயார்செய்து ஒட்டினார் என நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் யார் சொல்லி எனக்கு தகவல்கிடைத்தது என போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது ஊரைச்சேர்ந்தவர் என்றால் சரிதான். அ.சா.1 எனது ஊரைச்சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி எந்த குற்றச்செயலில் ஈடுபடவில்லை என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>
இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.07 10:51:36 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.348/2023**

**Prosecution Witness : 1**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : வினோத்ராஜ் | **Caste** | : | |
| **Father's Name** | : மருதையப்பன் | **Calling** | : | பைனான்ஸ் |
| **Village** | : தாடிக்கொம்பு | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **33/2026** |
| | | **Dated** | : | **07.04.2026** |

**07.04.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 **திரு.வினோத்ராஜ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் திண்டுக்கல் தாடிக்கொம்பில் குடியிருந்து பைனான்ஸ் தொழில்செய்து வருகிறேன். நான் திண்டுக்கல் மாவட்ட இந்து முன்னணி துணைத்தலைவராக செயல்பட்டுவருகிறேன். கடந்த 19.10.2022 ம் தேதி திங்கள் கிழமை காலை 06.00 மணியளவில் தாடிக்கொம்பு அகரம் முத்தாழம்மன் கோவிலுக்கு சென்றபோது கோவிலின் தெற்குபுரம் கோவிலுக்கு சொந்தமான புராணாதமான கல்வெட்டில் ஏசு ஒருவரே இறைவன் மற்ற கடவுள் எதுவும் இல்லை என்ற வாசகத்துடன் சுவரொட்டி ஒட்டப்பட்டு இருந்தது. அருகில் இருந்தவர்கள் உதவியுடன் அந்த சுவரொட்டியை கிழித்து கீழேபோட்டுவிட்டோம்.

22.10.2022ம் தேதி வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு கோவிலுக்கு அருகே மீண்டும் அதே வாசகங்களுடன் அதே கல்வெட்டில் சுவரொட்டி ஒட்டப்பட்டிருப்பதாக தகவல் சொன்னார்கள். நான் அங்கு சென்று பார்த்தேன். எனக்கு தகவல்சொன்ன மேற்படி நபர்களே மாரம்பாடி தெற்குத்தெருவைச் சேர்ந்த ஆரோக்கிய சாமி மகன் அந்தோணி பாஸ்கர்ராஜ் என்பவர்தான் மேற்படி பிரச்சனைக்குரிய சுவரொட்டியை ஒட்டிய நபர் என தெரிவித்தார்கள். மேற்படி சுவரொட்டி இரு மதங்களுக்கிடையே பிரிவினையை உருவாக்கும் என்பதால் காவல் நிலையம் சென்று நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகாரில் உள்ள கையெழுத்தும் ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தும் என்னுடையதா என்றால் இல்லை. கையொப்பம் மட்டும் என்னுடையது. மேற்படி ஆவணங்களின் கையெழுத்து ஒரே மாதிரி இருக்கிறது என்றால் சரிதான். புகாரில் மாற்றுமதத்தைச்சேர்ந்த நபர்கள் என குறிப்பிடும்போது எத்தனை நபர்கள் என குறிப்பிட்டேனா என்றால் இல்லை. 19.10.2022 மற்றும் 22.10.2022 தேதிகளில் சுவரொட்டி ஒட்டப்பட்டது சம்பந்தமாக யார் என்னிடம் தகவல்சொன்னதாக எனது புகாரிலோ போலிசார் வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் பார்த்தேன். யார் ஒட்டினார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்து முன்னணி மாவட்ட துணைத்தலைவர் என்பதால் தவறாக எதிரி மீது புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி போஸ்டர் ஆஜர்செய்தேனா என்றால் இல்லை. நாங்கள் போலிசை கூட்டிச்சென்று காண்பித்தேன். யார் மேற்படி போஸ்டரை தயார்செய்தது என தெரியாது. விசாரித்துதான் தெரிந்துகொண்டேன். நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் எதிரி போஸ்டரை ஒட்டவில்லை என்றாலும் குற்றச்செயலில் ஈடுபடவில்லை என்றாலும் நான் கட்சியில் இருப்பதால் அவருக்கு எதிராக தவறாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.04.07 10:51:46 +0530

Judicial Magistrate No.II

Dindigul.